## ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி – 2019/2020

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இகல் விரிவான வருமானம் மற்றும் தடுத்து வைத்த உழைப்பு தொடர்பான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை முன்வைக்கும் போது கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அதன் அமைப்பு, முறைமைகள் நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் பேணப்படுதல் வேண்டும்.

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க முகவராண்மை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான “சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுக்கான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியுடன் 2020 மார்ச் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா 66,111,152 ஆன பெறவேண்டிய மீதிகள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,297,192 காணப்பட்டதுடன் நியமத்தின் 11.21 இன் பிரகாரம் சேதமடைந்த நட்டங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். நியமத்தின் பிரகாரம் எதிர்வரும் வருடத்திலிருந்து சேதமடைந்த நட்டங்களை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் ஏற்பாடுககளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கந்தளே சூரியப் புரப் பிரதேசத்தில் மணல் சுரங்கத்தால் கிடைத்த வருமானத்திலிருந்து மகாவலி ஆற்றில் 3 பாதுகாப்பு அணைகள் அமைக்கும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 30,497,926 மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 31,433,216 ஆனவை கணக்கில் | மகாவலி ஆற்றில் பாதுகாப்பு அணைகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது கைச்சாத்திடப்பட்ட ஆரம்ப உடன்படிக்கைகள் அடிப்படையில் ஒவ்வொரு மணல் கியூப்களிலிருந்து பணம் புனரமைப்பு | சகல கொடுக்கல் வாங்கல்களும் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்படாமையுடன் ரூபா 935,289 ஆன மேலதிக கொடுப்பனவு மட்டுமே கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 2.52 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்படா முடியாத போதிலும், குறிப்பிட்ட மேலதிக கொடுப்பனவு சந்தைக்குச் செலுத்த வேண்டிய மதிப்பீட்டில் ஈடுசெய்யப்பட்டு காட்டப்பட்ட காரணத்தினால் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடவடிக்கைகளுக்காக தனியான ஒரு கணக்கில் வரவு வைக்கப்பட்டு குறித்த கொடுப்பனவுகள் மேற்கண்ட கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டது. ஏனைய செயற்திட்டக் கணக்குகளைப் போன்றே இக்கணக்கும் பேணப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | 2019/2020 ஆண்டின் இறுதிக் காலாண்டில் வருமான வரிப் பொறுப்பு கணக்கிடப்படும் போது நூற்றுக்கு 28 ஆன வரி வீதத்திற்குப் பதிலாக 24 சதவீத வரி விகிதத்தைப் பயன்படுத்தியமையால் வருமான வரிச் செலவு மற்றும் வரிப் பொறுப்பு ரூபா 674,397 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 29.27 இன் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரிப்பொறுப்புக்கள் கணக்கிடப்படும் போது நிறுத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ரூபா 824,512 ஆலும் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 47.358 ஆலும் குறைத்துக் காட்டப்பட்டமையுடன் நிறுத்தி வைக்கப்பட்ட வரி வருமானமானது ரூபா 777,154 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அனைத்து கணக்கீடுகளும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் வருமான வரி தொடர்பான அறிவுள்ள தரப்பினர் மற்றும் வரி ஆலோசனைச் சேவைகள் பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2010 மற்றும் 2011 வருடங்களுக்குரிய திட்டங்கள் இரண்டிற்காக மேலதிகமாகப் பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 2,049,600 தீர்க்கப்படாத காரணத்தினால் பெற வேண்டிய மிகுதி மற்றும் வருமானம் அப்பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | மேலதிகமாகப் பட்டியலிடப்பட்ட தொகையை எதிர்வரும் வருடத்தில் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானப் பிழையின்றி கணக்கிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீதிகள் உறுதிப்படுத்தல்களில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 2,849,250 ஆன பெற வேண்டிய 2 மீதிகள் குறிப்பிட்ட நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. | நிராகரிக்கப்பட்டிருந்த மீதிகள் நிதிக்கூற்றுக்களில் நீக்கப்படுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அனைத்துக் கடன்பட்டோரினதும் மீதிகளை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | திறைசேரியின் அனுமதியின்றி 10 சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகளுக்காக ரூபா 100,000 ஐ விஞ்சியதாக ரூபா 5,124,500 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட ரூபா 2,925,124 ஆன 27 இடைக்கட்டு நிதி மீதிகள் மற்றும் ரூபா 466,096 ஆன 24 சில்லறைக் கட்டு நிதி மீதிகள் வருட இறுதியின் போது தீர்க்கப்படாமையுடன் 17 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,982,000 ஆன முற்பணம் 115 நாட்கள் வரையான காலதாமதத்தில் தீர்க்கப்பட்டிருந்தது. | தகுதிநிலை உத்தியோகத்தர் மற்றும் விடயப்பரப்பு முகாமையாளரின் அனுமதியின் பேரில் செயற்திட்டங்களின் தன்மை மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்படுதலானது கட்டுநிதி விடுவிக்கப்பட்ட நிதியாண்டின் இறுதித் திகதிக்கு முன்பாக மேற்கொள்ளப் படுவதற்கான கவனம் எடுக்கப்படும். | குறிப்பிட்ட அனுமதியைப் பெறுவதற்கு மற்றும் நிதியாண்டின் இறுதி திகதிக்கு முன்னர் முற்பணம் தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.7 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டம், ஒழுங்கு / ஏவல்களின் கவனத்திற்கு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு | கம்பனிக்காக 2019 மார்ச் 31 இலிருந்து உள்ளகக் கணக்காய்வொன்று இல்லாதிருந்தமையுடன் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்றும் இருக்கவில்லை. | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2003 இன் யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 4.2.2 மற்றும் 4.2.6 ஆம் பந்தி | கம்பனியால் காலாண்டிற்கான, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையில் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ii) | 5.2.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் நிதியாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறுத்துவதற்கு 2019 வருடத்திற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டமையுடன் 2020 சனவரி தொடக்கம் மார்ச் வரையில் பாதீடொன்றும் தயாரிக்கப் பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | 6.5.1 ஆம் | 2020 யூலை 16 ஆந் திகதிய | Covid 19 தொற்றுநோய் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்தி | கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | காணரமாக இறுதிக் கணக்குகள் தயாரிப்பதற்குத் தாமத மேற்பட்டது.எதிர்காலங்களில் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iv) | 6.5.3 ஆம் பந்தி | 2015/2016 இலிருந்து 2018/2019 வரையிலான வருடங்களின் 2020 வருடாந்த அறிக்கைகள் 2020 ஆகஸ்ட் 31 வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2015/16 இலிருந்து 2018/19 வரையான வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் இற்றை வரையில் தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | - மேற்படி - |
| (v) | 8.3.3 ஆம் பந்தி | செலுத்த வேண்டிய ஊக்கத் தொகை / போனஸின் அதிகபட்சச் சம்பளம் 2 மாதங்கள் எனினும் 3 மாதங்களுக்கான மொத்த சம்பளத்தின் அடிப்படையில் 2018/2019 ஆம் வருடத்திற்கான ஊக்கத் தொகையாக ஊழியர்களுக்கு ரூபா 9,211,983 வழங்கப்பட்டிருந்தது. குறித்த ஊக்கத் தொகை 2018/2019 வருடத்திற்காக கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதற்கு முன்பு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | 2019 செப்டம்பர் 11 ஆந் திகதி செலுத்தப்பட்டமை போனஸ் அல்லாத ஊக்கத் தொகை 2019 கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்ட போது 2018/2019 ஆம் வருடத்தின் வரிக்கு முன்னரான இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்கத் தொகை செலுத்துவதற்குப் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும் அதன் பின்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது | - மேற்படி - |
| (இ) | 2015 யூன் 17 ஆந் திகதிய PED 03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் 2.2 ஆம் பந்தி | வரிசை அமைச்சரின் இணக்கம் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறாது தலைவரது படியான மாதாந்தம் ரூபா 50,000 வீதம் ரூபா 550,000 மற்றும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றல் கொடுப்பனவாக 8 பணிப்பாளர்களுக்கு மொத்தம் ரூபா 257,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் தலைவரது படிகள் மற்றும் பணிப்பாளர் சபையில் பங்குபற்றிய வர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு சம்பந்தமாக அமைச்சின் செயலாளரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2019 திசெம்பர் 09 ஆந் திகதிய PED/03/2019 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தி | போனஸ் கொடுப்பனவிற்காகத் தகுதி பெறுவதற்குப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் பூர்த்தி செய்யப்படாத போது 2018/2019 ஆம் வருடத்திற்கான போனஸாக ரூபா 2,027,339 ஆனது பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி 161 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. | 2019 திசெம்பர் 09 ஆந் திகதிய PED/03/2019 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் அடிப்படையில் 2019/2020 வருடத்தில் ஒரு ஊழியருக்கு ரூபா 13,500 வீதம் போனஸ் கொடுப்பனவு பிரதான தகுதிநிலை உத்தியோகத்தரின் இறுதியின் பிரகாரம் வழங்கப்பட்டது. | - மேற்படி - |
| (உ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றிக்கையின் பிரகாரம் 2021 இலிருந்து தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 37,887,098 இலாபம் என்பதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 37,806,854 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 80,224 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. செயற்திட்ட வருமானம் ரூபா 11,066,984 ஆல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் அல்லாத வருமானம் ரூபா 14,169,455 ஆல் அதிகரித்து இருந்தமையும் செயற்திட்ட செலவுகள் ரூபா 6,295,207 ஆல் குறைவடைந்து நிர்வாகச் செலவுகள் ரூபா 30,249,060 ஆல் மற்றும் நிதிச்செலவுகள் ரூபா 987,843 ஆல் அதிகரித்த காரணத்தினால் நிதி விளைவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கந்தளே சூரியபுர தும்மோதரப் பிரதேசத்தில் மணல் தோண்டுதல் சம்பந்தமாக மகாவலி அதிகார சபை மற்றும் கம்பனிக்கிடையில் | செயற்திட்டம் சம்பந்தமாக பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புக்கள் மற்றும் | செயற்திட்டத்தினை வினைத்திறனுடன் செயற் படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2020 சனவரி வரையில் 103,128 மணல் கியூப் தோண்டப்பட்டிருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 19 வரையில் 41,297 மணல் கியூப் மட்டுமே தோண்டப்பட்டிருந்தன. மணல் தோண்டுதல் சம்பந்தமாக இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டபோது குறிப்பிட்ட கிரயத்தினைப் பொருட்படுத்தாது வங்கிப் பிணையொன்று வழங்கப்படுவதற்கு உடன்பட்ட காரணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 900,000 ஆன தரகுப் பணம் கம்பனிக்கு பொருளாதாரமற்ற செலவாக காணப்பட்டது. | மழை போன்ற காரணத்தினால் செயற்திட்டம் தொடங்கப் படுவதற்குத் தாமதமானதுடன் அதை வெற்றிகரமாகச் செய்ய முடியவில்லை. மகாவலி அதிகார சபை உடன்படிக்கையினை தற்காலிகமாக இடைநிறுத்திய காரணத்தினால் செயற்திட்டக் காலம் மற்றும் வங்கிப் பிணையினை நீடிக்க வேண்டி ஏற்பட்டது. | மற்றும் உடன்படிக்கை ஏற்படுத்தும் போது குறிப்பிடப்பட்ட கிரயத்தினைக் கவனத்திற் கொள்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் 19 ஆந் திகதி மன்னம்பிட்டிய செயற்திட்ட அலுவலகத்தில் ஏற்பட்ட தீப்பிடித்தல் காரணமாக 3 அலுவலகக் கொள்கல்களில் இருந்த ஆவணங்கள் மற்றும் ரூபா 771,375 பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. இச் சந்தர்ப்பத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் பொருத்தப்பட்டிருந்த CCTV கெமரா முறைமையும் செயலற்ற நிலையில் காணப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தீப்பிடித்தல் என்று பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக கம்பனியினால் உள்கக் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | தீப்பிடித்தல் ஏற்படும் வரையில் சேவையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பந்தமாக இலங்கை பொலிஸ் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதுடன் செயலற்ற நிலையில் காணப்பட்ட CCTV கெமரா முறைமை குறிப்பிட்ட கம்பனியால் மீளமைக்கப் படுவதற்கு முன்னர் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது இது ஒரு திட்டமிடப்பட்ட செயலாகத் தோன்றியதால் பக்கச் | உள்ளகப் பரிசோதனை ஒன்றின் மூலம் தவறு இழைத்தவர்களை கண்டுபிடிப்பதற்காக அல்லது காப்புறுதி இழப்பீடு பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| என்பதுடன் சேதமடைந்த சொத்துக்களுக்காக காப்புறுதி இழப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை. | சார்பற்ற விசாரணைக்காக விசாரணை நடவடிக்கைகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதால் உள்ளகப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வில்லை. சேதமடைந்த சொத்துக்களுக்காக காப்புறுதி இழப்பீட்டு பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. | |

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2008 மார்ச் 31 ஆந் திகதிய SC(F/R) no 81/04 ஆம் இலக்க உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மகாவலி ஆற்றில் மனம்பிட்டிய பகுதியில் மணல் தோண்டும் நடவடிக்கைகளுக்கு மற்றும் கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் மணல் பற்றாக்குறைக்குத் தீர்வாக மணல் விற்பனை செய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கம்பனிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் மூலம் ஆற்றுப் பள்ளத்தாக்கு பிரதேசத்தில் மணல் தோண்டப்படுவதால் வன சீவராசிகள் திணைக்களத்தின் அனுமதி இல்லாமை மற்றும் ஏனைய அனுமதிகள் காலாவதியாகிய காரணத்தினால் 2019 நவம்பர் மாதத்தின் பின்னர் | 2020 சனவரி 06 இலிருந்து பொலன்னறுவை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட லொறி வாகனங்களுக்கு நூற்றுக்கு 75 வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. மணல் விடுவிக்கப்படும் போது எச்சந்தர்ப்பத்திலும் இலக்குக் கட்டுப்பாடுகள் இல்லை என்பதுடன் செயற்திட்ட மணல் பெருமளவு கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களிற்கு அனுப்பப்பட்டிருந்தது. இதனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாது இருக்கவில்லை. | உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கான செயன்முறைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மணல் தோண்டுதல் கைவிடப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தில் மேலும், மணல் அடிப்பட்டிருந்தமையால் உயர் நீதிமன்றம் எதிர்பார்த்தவாறு வெள்ள நிலைமைகளை கட்டுப்படுத்தலானது சவாலாக அமைந்திருந்தது. மேலும், கம்பனியால் மணல் விடுவிப்பதற்குத் சாதாரண மற்றும் திட்டவட்டமான முறைமையொன்றைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையுடன் செயற்திட்டத்தினால் தோண்டப்படும் மணல்களின் நூற்றுக்கு 85 வீதம் பொலன்னறுவை மாவட்டத்தில் லொறி வாகனங்களுக்காக மற்றும் நூற்றுக்கு 15 வீதம் மாவட்டத்தின் வெளியே லொறி வாகனங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த காரணத்தினால் உயர் நீதிமன்ற தீர்ப்பினால் எதிர்பார்க்கப்பட்டவாறு கொழும்பு உட்பட தீவின் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் மணல் பற்றாக்குறைக்கு செயற்திட்டத்தின் மூலம் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தமை சம்பந்தமாக கணக்காய்வின் போது திருப்தி அடைய முடியாது. | | |
| (ஆ) | மனம்பிட்டிய மணல் தோண்டும் செயற்திட்டத்தின் II ஆம் கட்டத்தில் 2018 ஒக்டோபர் 16 ஆந் திகதியின் பின்னர் மணல் தோண்டுதல் மேற்கொள்ளப்படுவதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி வழங்கப்பட்டிருக்காமையால் 2019 ஆகஸ்ட் இலிருந்து நவம்பர் வரையான காலப்பகுதிக்குள் 3,120.5 மணல் கியூப் தோண்டப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் அனுமதி தாமதமான காரணத்தினால் செயற்திட்டம் தொடங்குவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும், வேறு அகழ்வாராய்ச்சி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த கால எல்லை வெளியே எந்த அகழ்வாராய்ச்சியும் மேற்கொள்ளப்பட | குறிப்பிட்ட அனுமதியின் அடிப்படையில் மட்டுமே தோண்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வில்லை. | |
| (இ) | பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் செயற்திட்டங்களில் சேவை புரியும் மணல் அகழ்வாராய்ச்சியாளர்கள் பசுமை மணல் துறைமுகத்தின் கருத்துக்கு மாற்றியமைப்பதற்காக பணிப்பாளர் சபையின் ஒப்புதல் அனுமதியின் அடிப்படையில் ரூபா 2,893,340 செலவிடப்பட்டு 2020 யூன் 22 ஆந் திகதி வேலைத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் உத்தியோகத்தருக்காக தனிப்பட்ட நிறுவனமொன்று சம்பந்தப்படுத்தப்பட்டு ரூபா 235,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அகழ்வாராய்ச்சியாளர்கள் 1500 பேருக்கு பங்கிடுவதற்காக ரூபா 1,049,000 செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1500 உலர் உணவுப் பைகளில் 934 ஆனது அத்தினத்தில் மணல் தோண்டுவோருக்கு பங்களிடப்பட்டமையுடன் ரூபா 396,000 ஆன மிகுதி 566 உலர் உணவுப் பைகள் பங்கிடப்பட்டதற்கான தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் பல மணல் செயற்திட்டங்களின் தாழ்வாராங்களில் ஒரு பச்சை மணல் துறைமுகம் எனும் கருத்து முறையாக செயற்படுத்தப்படாமையுடன் மற்றும் வேலைத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | குறிப்பிட்ட வேலைத் திட்டத்தை விரைவாகச் செயற்படுத்துவதற்கு ஏற்பட்டமையால் அனுமதியானது வேலைத்திட்டம் செயற்படுத்தியதன் பின்னரே பெறப்பட்டது. குறிப்பிட்ட விரிவுரைகள் மற்றும் நிகழ்ச்சிகளின் அமைப்பு Colombo School of Business Management இற்கு கையளிக்கப் பட்டதுடன் அந்நிறுவனம் இது போன்ற திட்டங்களை ஒழுங்கமைப்பதில் முன்னிலையில் காணப்படுகின்றது. இனிமேல் செலவுக் குறைப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் செயற்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும். | குறிப்பிட்ட அனுமதியின் அடிப்படையில் மட்டுமே வேலைத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் கொடிகம்போக்க படிகக்கல் வைப்பிலிருந்து சேர்க்கப்பட்ட மதிப்பை அகழ்வாராய்ச்சி மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் கம்பனிக்குச் சாட்டப்பட்டிருந்த போதிலும், 2020 ஆகஸ்ட் வரையில் செயற்திட்டம் | செயற்திட்டத்தை நடாத்திச் செல்லும் போது காணியொன்று வாடகை அடிப்படையிலும் அளத்தல் நடவடிக்கை களுக்காக தரை அளவு கருவியும் | செயற்திட்டம் விரைவில் தொடங்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் செயற்திட்டத்திற்காக சுற்றுச்சுழல் தாக்க மதிப்பீட்டிற்கும் (EIA) பதிலாக பூர்வாங்கச் சுற்றுச்சூழல் சோதனை (IEE) மேற்கொள்வது போதுமானதா என்பது குறித்து உறுதியான முடிவினை எடுப்பதற்கு முடியாதிருந்தது. 2017 ஆம் வருடத்திலிருந்து செயற்திட்டம் எவ்வித வருமானத்தையும் உழைக்காதிருந்த போதிலும், காணியொன்றை வாடகை அடிப்படையில் பெறுவதற்காக ரூபா 3,720,000, தோண்டப்பட்ட படிகக்கற்களை நிறுப்பதற்காகப் பாலம் ஒன்றைப் பொருத்துவதற்காக ரூபா 2,200,000, அதன் பாதுகாப்பிற்காக ரூபா 4,562,750 என்பன உள்ளடங்கலாக வருமான மற்றும் மூலதனச் செலவாக கம்பினியால் ரூபா 20,471,481 செலவிடப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்டன. இன்னும் ஒரு காணியொன்றை கண்டுபிடிப்பதற்குரிய வசதி இன்மையால் அதற்கு உபயோகிக்கப் பட்டிருந்த காணிக்காக வாடகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததுடன் தரை அளத்தல் கருவியின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு உத்தியோகத்தர் களின் சேவை பெறப்பட்டது. செயற்திட்டத்தினைத் தொடங்குவதற்குரிய நடவடிக்கை திட்டமிடப்பட்டிருந்த படியால் ஏற்படக் கூடிய செலவை ஈடுசெய்வதன் மூலம் மேலதிக இலாபத்தை உழைப்பதற்கு முடியுமாக இருக்கும். | |
| (உ) | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த 2 செயற்திட்டங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் மிகையான ரூபா 854,506 ஆனது அறவிடப்படுவதற்கு 2020 ஆகஸ்ட் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் அறவிடல் சம்பந்தமாக மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. | குறிப்பிட்ட தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஊ) | மனம்பிட்டிய செயற்திட்டத்திற்காக ரூபா 2,423,224 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 40 கிலோவாட் ஜெனரேட்டர் எவ்வித மறைப்புமில்லாது மற்றும் பாதுகாப்பற்ற கொள்கலன் கூரையில் பொருத்தப்பட்டிருந்தது. | ஜெனரேட்டர் நீர் மற்றும் சூரியக் கதிர்களை எதிர்க்கும் என்பதால் மறைப்பு அவசியமில்லை. விலங்குகளிடமிருந்து பாதுகாக்க கொள்கலனில் நிறுவப்பட்டுள்ளதுடன் அது எடையைச் | சொத்துக்களின் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | சுமக்கும் திறன் கொண்டது. | |

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் வருடத்திற்கு ஒப்பந்த சேவைக் காலத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த 64 ஊழியர்களுக்கு 3 வருடங்களின் கொடுப்பனவு அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூபா 11.566,088 இடர்க்கடன் வழங்கப்பட்டிருந்தது. | நிறுவனம் இடர்க் கடன் வழங்குதல் மற்றும் அறவிடல் விதிமுறைகள் குறிப்பிடப்பட்ட கடன் திட்ட முறை 2010 செப்டம்பர் மாதத்திலிருந்து பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டது. நிறுவனத்தின் ஊழியர்கள் நிரந்தர ஊழியர்கள் அல்ல என்பதால், ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களும் பிணையாளர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர். | ஒப்பந்த சேவைக் காலத்தினுள் கடன் மீண்டும் அறவிடப்படுவதற்கு மற்றும் கடன் திட்ட முறைமைக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள், மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மனம்பிட்டிய மணல் தோண்டும் செயற்திட்டத்தின் மணல் ஏற்றுவதற்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 8,883,520 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஏற்றும் இயந்திரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றதாகக் காணப்பட்டதுடன் அதன் என்ஜின் பழுதுபார்த்தல் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டில் ரூபா 966,595 செலவிடப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் கீழ் அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்களை அகற்றுவதற்கோ அல்லது பயன் படுத்துவதற்கோ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை செயன்முறைகளைப் பின்பற்றாது பொலன்னறுவையில் இடம்பெற்ற வேலைத்திட்டத்தில் பங்கீடு செய்வதற்காக 2 நிறுவனங்களில் ரூபா 972,000 இற்கான உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் ஒரு நிறுவனத்தில் விலைமனு பெறப்பட்டு மனம்பிட்டிய செயற்திட்டப் பரப்பில் ரூபா 689,030 ஆன 16 CCTV கெமராக்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தன. CCTV கெமரா முறைமையின் செயற்பாடுகளுக்காக வருடத்திற்கு உத்தரவாதக் காலம் வழங்கப்பட்டிருந்தமையுடன் போக்குவரத்து மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 124,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 3 கெமராக்கள் செயற்படாத நிலையில் இருந்ததுடன் கெமராக்கள் குறிப்பிட்ட நோக்கத்தினைக் கொண்ட காட்சிகளுக்கு வெளியே இருந்தன. | விரைவான தேவையின் காரணமாக தலைவரின் ஆலோசனையின் படி லங்கா சதோசா நிறுவனத்தில் விலைமனுக் கோரப்பட்டு அதற்கும் குறைந்த விலைக்கும் உலர்உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. தேவையின் நிமித்தம் ஒரு நிறுவனத்தில் மட்டும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் பெறப்பட்டு அதில் குறிப்பிடப் பட்டிருந்ததன் பிரகாரம் CCTV முறைமை ஸ்தாபிக்கப்பட்டது. கெமரா முறைமைகளில் உள்ள காட்சிகள் மீண்டும் சரி செய்யப்பட்டமையுடன் CCTV முறைமையின் உத்திரவாதக் காலம் வழங்கப்பட்டிராத உதிரிப் பாகங்கள் தொடர்பான பழுதுபார்த்தல் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டி ஏற்பட்டது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | பெறுகை நடைமுறைகள் எதையும் பின்பற்றாது மனம்பிட்டிய செயற்திட்டப் பரப்பில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 2 மலசலகூட முறைமைகளுக்காக பொறியியலாளர் ஒருவரின் சான்றுப்படுத்தல் இன்றி ரூபா | மலசல கூட முறைமையின் தொழல்நுட்ப நியமயங்களை அவதானிப்பதற்காகச் சாட்டப்பட்டிருந்த தொழில்நுட்ப | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 2,524,703 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உத்தியோகத்தரின் பரிந்துரையின் அடிப்படையில் குறிப்பிட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | |
| (இ) | கந்தளே சூரியப் புரப் பிதேசத்தில் மகாவலி ஆற்றின் 3 பாதுகாப்பு அணைகள் நிர்மாணிப்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களம் ரூபா 148,900,000 ஆன மதிப்பீட்டை சமர்ப்பித்திருந்தமையுடன் அதில் அச்சீட்டு எண்ணிக்கைகள் வெட்டப்பட்டு மாற்றப்பட்டிருந்தமையினால் ஏற்றுக் கொள்ள முடியாது. செயற்திட்டத்திற்காக 3 கியூப் கருங்கல் லொட் 60 இனைக் கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட விசேட செயற்திட்ட முகாமையாளருக்கு ரூபா 1.7 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட முகாமையாளர் பெறுகை வழிகாட்டியைப் பின்பற்றாது தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு ரூபா 1,397,260 கொடுப்பனவு செய்து 418.8 கனமீட்டர் கருங்கல்லைப் பயன்படுதி கிரனைட் போடப்பட்டது. மேலும், பாதுகாப்பு அணைகள் நிர்மாணத்தின் நடவடிக்கைகள் 5 விவசாய அமைப்புக்களுக்கு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் சாட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக 2020 மார்ச் 31 ஆந் திகதியில் ரூபா 29,642,509 ஆனது நீர்ப்பாசன பொறியியலாளரின் அல்லது சிவில் பொறியியலாளரின் சான்றுப்படுத்தல் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 7,751,062 ஆன 3 இடைக்காலக் கொடுப்பனவுகளில் பெறுகை வழிகாட்டி 5.4.6 இன் பிரகாரம் தக்க வைக்கப்பட்ட | அச்சீட்டு எண்ணிக்கை அடங்கலாக மதிப்பீடு ஒன்று நீர்ப்பாசனத் திணைக்களத்திட மிருந்து பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். 60 கருங்கல் லொட் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டு அரிப்புத் தடைகளை நிர்மாணிப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனைத்து நிர்மாணிப்புக்களும் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு மேலதிகமாக இலங்கை மகாவலி அதிகாரசபையின் பொறியியலாளரினால் மேற்பார்வை செய்யப்படுவதுடன் அம்மேற்பார்வைச் சந்தர்ப்பங்களில் செய்யப்படும் லொக் குறிப்புக்களின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப் படுகின்றது. விவசாய அமைப்புக்களுடன் உடன்படிக்கையை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகை குறைக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட நிர்மாணம் சரியான நியமங்களுக்கேற்ப மேற்கொள்ளப்படாமை நீர்ப்பாசன பொறியியலாளர் (நீர்ச்சக்தி) மற்றும் நீர்ச்சக்தி அதிகாரசபையினால் 2020 யூலை 13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மூலம் காட்டப்பட்டிருந்தது. | ஏற்படுத்தாமை தொடர்பாக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயத்துடன் இணங்குகின்றேன். | |
| (ஈ) | அலுவலகத்தின் உபயோகத்திற்காக 7 கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது பெறுகை வழிகாட்டிகள் 5.3.1(ஈ) பிரகாரம் விவரக்குறிப்புக்கள் மற்றும் ஏல ஆவணங்கள் அனுமதிக்கப்பட்டிராமையுடன் வழிகாட்டி இலக்கம் 6.4.1 இன் பிரகாரம் ஏல ஆவணங்கள் விநியோகப்பட்டதற்கான எவ்வித பதிவுகளும் இருக்கவில்லை. 7 கொள்கலன்கள் பெறுகை வழிகாட்டியினைப் பின்பற்றி கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் மீண்டும் 3 கொள்கலன்கள் விலைமனுக்கோரல் முறையின் கீழ் அதிக விலை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட முன்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை பெறுதல் மற்றும் பெறுகைக் குழுவின் அனுமதி பெறுதல் மேற்கொள்ளப் பட்டிருந்தன. எதிர்காலத்தில் ஏல ஆவணங்கள் விநியோகிக்கப் படுதலுடன் தொடர்பான தகவல்கள் பேணப்படும். 7 கன்டெயினர் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு மனு மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்த மையால் மீண்டும் விலைமனுக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெறுகை வழிகாட்டியின் பக்கம் கவனம் செலுத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியில் சேவையாற்றும் 175 ஊழியர்கள் அடங்கலாக 224 பதவியணியினருக்கு அங்கீகாரம் பெறப்படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்தும் 2020 ஆகஸ்ட் 31 வரையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மனிதவள முகாமையாளர், பெறுகை மற்றும் வழங்கல் முகாமையாளர் மற்றும் சந்தைப்படுத்தல் திட்டமிடல் முகாமையாளர் போன்ற 3 பதவிகளுக்காக பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தற்போது இருக்கின்ற மூன்று உத்தியோகத்தர்களும் ஆட்சேர்க்கப்பட்டனர். குறிப்பிட்ட ஆட்சேர்ப்புப் பணியின் போது தினமும் பெறப்பட்ட விண்ணப்பங்கள் முறையாக ஆவணப்படுத்தப்படாமை மற்றும் நியாயமற்ற விடயங்களின் அடிப்படையில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை, அங்கீகரிக்கப்பட்ட உறுதியான திட்டத்திற்கு முரணாக நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட்டமை மற்றும் புள்ளிகள் வழங்கப்பட்டதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களினால் ஆட்சேர்ப்பு செயல்முறையானது நியாயமாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப்படவில்லை. | ஊழியர்கள் திட்டம் அங்கீகரிக்கப் படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிட்டவாறு முகாமையாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பானது முறையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப் பட்டதென்பதை தெரிவிக்கின்றேன். | ஊழியர் திட்டம் அங்கீகரிக்கப் படுவதற்கு மற்றும் முறையாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |